கல்லூரிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு, அவை அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மீதமிருக்கக்கூடிய 27 கல்லூரிகளையும் கூடிய விரைவிலே அரசு கல்லூரிகளாக மாற்ற அரசாணை வெளியிடப்படும். ஏற்கெனவே இருந்த அரசாணையில்கூட காமராஜர் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட இரண்டு கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மதுரையில் உள்ள அந்தக் கல்லூரியையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. கண்டிப்பாக அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தக் கல்லூரியையும் அரசு கல்லூரியாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

அமுதம் பல்பொருள் அங்காடி

***17389—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், சூரக்கோட்டை ஊராட்சி, பெரிய புதுப்பட்டினம் கிராமத்தில் அமுதம் பல்பொருள் அங்காடியை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

2019 ஜூலை 4]

(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தஞ்சாவூர் ஒன்றியத்தில் உள்ள புதுப்பட்டினம் முழுநேர நியாய விலைக் கடை 1,209 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் நியாய விலைக் கடை கோரும் பெரிய புதுப்பட்டினம் பகுதியில் புதியதாக நியாய விலைக் கடை திறக்க தற்போது சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரான எங்களுடைய கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே அமுதம் பல்பொருள் அங்காடியைத் திறப்பதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது என இங்கே சொல்லியிருக்கிறார்கள். தஞ்சைக்கு மிக அருகில் இருக்கின்ற ஊராட்சி, சூரக்கோட்டை ஊராட்சி. ஆகவே, பக்கத்தில் இருக்கின்ற புதுப்பட்டினம், வாஸ்தாசாவடி, அம்மாகுளம், நத்தமடிப்பட்டி, வெங்கடேஸ்வரா நகர் இப்படி பல்வேறு நகர்கள் இப்போது உருவாகி, நஞ்சைகளெல்லாம் புஞ்சைகளாகி, கட்டுமனைகளாக ஆக்கப்பட்டு, நகர்களாக, நகரைச் சுற்றி பெருவாரியான இடங்கள் கட்டடங்களாக ஆகி, நிறைய குடும்பங்களெல்லாம் வந்துவிட்டன. இதற்கு முன்னாலே புதுப்பட்டினத்தில்தான் அந்த அமுதம் அங்காடியே இருந்தது. அதற்குப் பின்னாலேதான் வாஸ்தாசாவடிக்கு அது மாற்றப்பட்டது. அங்கிருந்த கட்டடம் இன்னும் அப்படியே இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள பகுதிகள் இன்றைக்கு வளர்ந்தோங்கி, ஒரு சிறிய நகரமாகவே அது ஆகிவிட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, அந்தப் பகுதியிலே ஓர் அமுதம் அங்காடி இருந்தால்தான், அந்தப் பகுதி மக்கள் உணவுப் பொருட்களை எளிதில் பெற்றுக் கொள்ள முடியும். எனவே, அதற்கான சாத்தியக்கூறுகளையெல்லாம் ஆராய்ந்து, அதிகாரிகளுக்கு சரியான, முறையான அறிவுறுத்தலைச் சொல்லி, அங்கே அமுதம்

அங்காடியைத் திறப்பது நல்லது என்பதை அறிந்து, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள பெரிய புதுப்பட்டினத்தில் 1979-லிருந்து 1987 வரை, அதாவது அன்றைய நேரத்திலே பயிற்சிப் பட்டியல் எழுத்தாளர்களால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக ஓர் அமுதம் அங்காடி தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால், அது கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, அது முழுநேர அங்காடியாக இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதுப்பட்டினத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தக் கடையை, பழையபடி பெரிய புதுப்பட்டினத்தில் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்குமா என்று கேட்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5, 6 ஊர்களின் பெயர்களைச் சொன்னார்கள். அம்மாகுளம், கள்ளித்தோப்பு, எம்.ஜி.ஆர். காலனி போன்ற பகுதிகளெல்லாம் அதற்குள்தான் வருகின்றன. நீங்கள், பெரிய புதுப்பட்டினத்தில் கடையைத் திரும்பவும் தொடங்க வேண்டுமென்று விரும்புகின்றீர்கள். பக்கத்தில் இருக்கின்ற 11 கிராமங்களை உள்ளடக்கியதுதான் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிற 1,209 குடும்ப அட்டைகளைக் கொண்ட முழுநேர அங்காடி. அந்த அங்காடியைப் பிரித்து, பெரிய புதுப்பட்டினத்திலே ஓர் அங்காடியைத் திறக்க வேண்டுமென்று சொன்னால், எந்தெந்த கிராமங்களெல்லாம் அதில் சேர்கின்றனவோ, எந்த கிராமங்களை சேர்ப்பதற்கு அந்த மக்கள் ஒத்துக்கொள்கிறார்களோ அவற்றையெல்லாம் இணைத்து, அதே இடத்திலே ஒரு முழுநேர அங்காடியையோ அல்லது ஒரு பகுதிநேர அங்காடியையோ திறப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக, உறுதியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 4]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு இலாகா என்பது மிகச் சிறந்த இலாகாவாக அந்தக் காலத்திலே கருதப்பட்டது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், இப்போதும் அது சிறந்த இலாகாதான்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *அண்ணா அவர்களின் காலத்திலே உணவு இலாகா ஆரம்பிக்கப்பட்டபோது திரு. மாதவன் அவர்கள்தான் உணவு இலாகாவை கவனித்து வந்தார். அவர் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றினார் என்பது அப்போதுள்ள பேச்சு. அவரைத் தொடர்ந்து வந்திருக்கிற அமைச்சர்கள் எல்லாம் உணவு இலாகாவை சரியாக நடத்துகிறார்களா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. இந்த ஆட்சிக்கு ஒரு நல்ல பெயரைத் தருகிற இலாகா இது. அப்படிப்பட்ட இலாகாவிலே இருக்கிற அதிகாரிகள் முறையாகச் செயல்பட வேண்டும். நான் அந்த கிராமத்தினரிடம் பேசி அந்தக் கிராம மக்கள் எல்லாம் அந்த அங்காடிக்கு வருவார்களா என்பதையெல்லாம் நாம் அறிந்து செயல்பட வேண்டும். அது இன்று வளர்ந்திருக்கிற இடம். அது தஞ்சை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இடம். ஆனால், இன்னும் அந்த மாநகராட்சியோடு சேர்க்கப்படவில்லை. அறிவிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பக்கத்தில் இருக்கிற அத்தனை நகர்களும், வெங்கடேஸ்வரா நகர் உள்பட, பெரிய புதுப்பட்டினத்தின் பக்கத்தில் இருக்கின்ற இன்னும் பல பகுதிகள் வளர்ந்து நிறைய கட்டடங்கள் வந்து விட்டன. ஆகவே, நீங்கள் சொல்கிற 1,209 குடும்ப அட்டைதாரர்களும் ஒரே இடத்தில் பொருட்களை வாங்குவது என்பது சிரமம். வாஸ்தாசாவடியில் சாமான்கள் வைப்பதற்கு போதிய இடமில்லை. பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கி* Distribute *செய்ய வேண்டுமென்றால், வாஸ்தாசாவடியில் பொருட்களை வைப்பதற்குத் தேவையான பெரிய இடமில்லை. அதற்கு பெரிய* Godown *வேண்டும். ஆக, 1,209 குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரே இடத்திலே வாங்கிக்கொள்வதைவிட, கார்டுகளைப் பிரித்து பெரிய புதுப்பட்டினத்திலே, பழைய*

அங்காடி இருந்த இடத்திலே ஒரு கடையைத் தொடங்கினால், அங்குள்ளவர்கள் எல்லாம் பொருட்களை வாங்கிக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அதை நீங்கள் கணக்கில்கொள்ள வேண்டும். 1,209 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்களை வழங்குவதற்கு இடமிருக்கிறதா? அங்கு இடம் போதுமானதாக இருக்கிறதா? எல்லாப் பொருட்களையும் வாங்கி வைக்க வேண்டும்; கொடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு வழி இருக்கிறதா என்பதைப் பார்த்தோமென்றால், வாஸ்தாசாவடியில் அது முடியாது. ஆகையினாலே, பெரிய புதுப்பட்டினத்திலே ஓர் அங்காடியை அமைத்துத் தந்தால், அங்குள்ளவர்களெல்லாம் அங்கே போய் பொருட்களை வாங்கிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, ஒவ்வொரு கடைக்கும் 600 குடும்ப அட்டைகள் என இரண்டு கடைகளாகப் பிரித்தால் இதற்கெல்லாம் வழி ஏற்படும். அந்தமாதிரி எளிதாக்க வேண்டுமே தவிர, சிரமங்களைச் சொல்லி, தட்டிக் கழிப்பதற்குரிய வேலைகளைச் செய்யக் கூடாது. எனவே, அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவுத் துறையைப் பற்றிப் பெருமையாகச் சொன்னார்கள். நன்றி. உணவுத் துறையிலே ஜாம்பவான்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஜாம்பவான்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்த உணவுத் துறைக்கு சாமானியனான எனக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8 ஆண்டுகள் (மேசையைத் தட்டும் ஒலி) பணியாற்றுவதற்கான வாய்ப்பை அளித்து, இன்றைக்கும் தொடர்ந்து அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் அம்மா அவர்களை நினைவுகூர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் நன்றி கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிப்பது, புதுப்பட்டினத்தில் இருக்கிற கடையைப் பிரித்து பெரிய

2019 ஜூலை 4]

புதுப்பட்டினத்திலே ஒரு பகுதிநேர கடையையோ அல்லது முழுநேரக் கடையையோ திறப்பதிலே ஆட்சேபணை கிடையாது. புதுப்பட்டினத்திலே கடை இருக்கிறது. 500 கார்டுகள் இருந்தால்தான் நிரந்தரக் கடையாக ஆக்க முடியும். 500 கார்டுகள் இல்லையென்று சொன்னால், அது பகுதிநேரக் கடையாகி விடும். அதனால், அதைப் பகுதிநேரக் கடையாக வைக்க வேண்டுமா அல்லது முழுநேரக் கடையாக ஆக்க வேண்டுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலந்தாலோசித்து ஒரு முடிவை தெரிவிக்குமாறு தெரிவித்தேன். இருந்தபோதிலும், ஆய்விற்குப் பிறகு நிச்சயமாக ஒரு கடை அமைத்துத் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பகுதிநேர அங்காடியாக இருப்பதா அல்லது முழுநேர அங்காடியாக இருப்பதா என்பது. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன், உங்களுடைய வாய்ப்பு முடிந்துவிட்டது. (சிரிப்பு)*

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

ஆரம்ப சுகாதார நிலையம்

***37732—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுமாவிலங்கை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?